**இயற்கையைப் போற்றுவோம் - 1**
**இயற்கை எழில்**
(மரபு சாராக் கவிதை)

அறிவெனும் விளக்கு கைகளில் இருந்தும்
கண்பொத்தி நடந்து கும்மிருட்டுக் குழியில்
விழுந்து வாடும் வியக்கும் மனிதர்களே
உங்களைச் சுற்றி ஓர்நிமிடநேரம் உற்றுப் பாருங்கள்!

காலங்காலமாய் தூங்கியேக் கிடக்கும் கருப்பு மலைகள்;
அவைமேல் வெள்ளைப் புடவையை விரித்து ஆட்டுவது போல்
கொள்ளை கொள்ளும் குளிர்பனி அருவிகள்!
மண்ணின்மேல் விழுந்து மகிழ்ந்து புரளும்
எண்ணம் கவரும் ஏற்றமிகு ஆறுகள்!

நுரைபொங்கும் ஆற்றின் நீண்டப் பயணத்தின்
கரையெங்கும் வளர்ந்த கவின்மிகு காடுகள்!
இயற்கைத் தாயின் இணையில்லா காட்டு மரங்கள்
மனிதவாழ்வின் மகோன்னதச் சித்திரம்!

அங்கே –
‘குக்கூ’ என்று கூவும் குருவிகள் ஒருபுறம்;
சின்ன இதழ் விரித்து சிரிக்கும் மலர்கள் மறுபுறம்;
காடுகள்... காடுகள்...! மனித வாழ்வின் ஏற்றமிகு ஏடுகள்!

அது – பாடித்திரியும் பறவைகளின் பள்ளியறை!
அது – ஓடித்திரியும் ஒய்யார மான்களின் களிக் கூடம்!
அது – சீறிப்பாயும் சிங்கம்புலிகளின் சீற்றப் பாசறை!
அது – ஆயிரம் ஆயிரம் உயிர்கள் வாழும் இயற்கை ஆலயம்!

இந்த ஆலயத்தை அழிக்கும் அவல மனிதனை
அரக்கனென்பதா? அறிவிலி என்பதா? அந்தோ பரிதாபம்!

பெற்ற தாயைப் பெருவாள் கொண்டு
சிற்றறி வாலே சிதைத்து அழிப்பதா?
பச்சைக்கைகளால் பசுநிழல் பரப்பி
உச்சிவெயிலில் உயிரைக்காப்பது
இந்த மரஞ்செடிகொடிகள் தானே?

வரண்ட மனங்கள்போல் வையகம் பாலை யாகாமல்
திரண்ட மழையால் தரணியைக் காப்பது
இந்த மரஞ்செடிகொடிகள் தானே?

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும்,
திண்ணமாய்க் கொடுத்து உயிர்களை காப்பது
இந்த மரஞ்செடிகொடிகள் தானே?

மதியற்று மரத்தை வெட்டி மாய்த்திடும்
வதியற்ற வீணர் மனிதரே, கேளும்...
“வெட்டப்பட்டு, வீழ்த்தப்படுவது மரங்கள் மட்டுமல்ல –
மனித வாழ்வும் தான்”!

- மு. முத்துஜோதி